**PROCEEDINGS OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED TO CONSIDER THE ISSUE ENVIRONMENTAL CLEARANCE BY THE STATE ENVIRONMENT IMPACT ASSESSMENT AUTHORITY (SEIAA – TN) FOR THE PROPOSED ROUGH STONE AND GRAVEL QUARRY IN AN EXTENT OF 0.89.50 HA BY M/S.SIVASWAMY RATHNAVELU ROUGH STONE AND GRAVEL QUARRY, SF.NO.700/1(PART), MAGARAL - B VILLAGE, WALAJABAD TALUK, KANCHEEPURAM DISTRICT.**

**Name of the Project:** Proposed Rough Stone and Gravel Quarry by **M/S. Sivaswamy Rathnavelu Rough Stone And Gravel Quarry** in an extent of 0.89.50 Ha located at SF.NO.700/1(PART), Magaral - B Village, Walajabad Taluk, Kancheepuram District.

**Venue:** M/s.Bhakya Marriage hall, Near Magaral Police station, Magaral Village, Walajabad Taluk, Kancheepuram District -631 603.

**Date:** 19.08.2025

**Present:**

| | | |
|---|---|---|
| 1. | Mr. P.I. Ashik Ali, IAS | Sub Collector<br>Kancheepuram. |
| 2. | Mr. V.Purushothaman | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Sriperumbudur |
| 3. | Mr.V.Rangasamy | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Kancheepuram District. |
| 4 | Mr.R.Selvarajan | Assistant Manager<br>Tamil Nadu Pollution Control Board,<br>Sriperumbudur |
| 5 | Mr.R.Dravidaselvam | Typist<br>Tamil Nadu Pollution Control Board,<br>Sriperumbudur |

| | | |
|---|---|---|
| 6. | Mr.S.Rathnavelu | Owner of the Proposed quarry |
| 7. | Public, NGO's and Environmentalists | 69 Persons (List Enclosed) |

The District Environmental Engineer (DEE), Tamil Nadu Pollution Control Board, Sriperumbdur, welcomed the Sub Collector Kancheepuram, Government officials, the General public, and NGOs/environmentalists for the public hearing and informed them that the proposed Rough Stone and Gravel quarry by M/S.Sivaswamy Rathnavelu Rough Stone And Gravel Quarry, S.F.No.700/1(Part), Magaral - B Village, Walajabad Taluk, Kancheepuram District, in an extent of 0.89.50Ha, attracts Environmental Impact Assessment Notification 2006, as amended under the category "B1" in the schedule 1(d) of the said notification. Furthermore, the DEE, TNPCB, Sriperumbudur has also informed the following.

The State Environment Impact Assessment Authority (SEIAA – TN) issued the Terms of Reference (ToR) with a public hearing on 14.05.2024 for preparing the Environmental Impact Assessment (EIA) report for the said activity under the Environmental Impact Assessment Notification, 2006 as amended.

The project proponent has submitted the draft EIA report to the office of the District Environmental Engineer, TNPCB, Sriperumbudur at Oragadam and requested to conduct the Public Hearing Meeting for its proposed activity. In this regard, Public Notices for this Public Hearing Meeting scheduled on 19.08.2025, were published in *New Indian Express* and *Dinakaran Newspapers* on 05.07.2025 with the approval of the District Collector, Kancheepuram. Further, Public announcements have also been made via speakers in the surrounding villages about this Public Hearing Meeting.

The District Environmental Engineer has added that the details of the proposed project and the Environmental Impact Assessment (EIA) study conducted would be explained through a Power Point presentation by the EIA Consultant on behalf of the Project Proponent. Furthermore, the DEE has requested that, after the presentation, the public clearly state their name and village details, and then express their views, suggestions, and comments on the project, either verbally or in writing, one by one. Additionally, he informed that the opinions and suggestions of the public

and environmentalists will be recorded and forwarded to the SEIAA-TN and requested the Sub Collector, Kancheepuram to preside over the Meeting.

The Sub Collector, Kancheepuram has requested the Project proponent to explain about the proposed stone quarry Project and the Environmental Impact Assessment (EIA) study conducted to the Public.

Following this, on behalf of the Project Proponent, the EIA Consultant welcomed the Sub Collector, District Environmental Engineer, Government Officials, General Public and Environmentalists and then explained the Proposed stone quarry Project and EIA study conducted with help of Power Point Presentation.

After the Presentation, the Sub Collector Kancheepuram has requested the Public to express their views / opinions either verbally or in writing by clearly stating their names and villages. Accordingly, the Public have expressed their views and opinions as follows.

1) **Mr. Ajithkumar Magaral Village,**

He stated that the quarry owners should give priority to their village people in terms of employment opportunities.

2) **Mr.Manikandan, Magaral, New Colony**

He stated that the quarry has implemented numerous welfare projects in his village and that the proposed quarry is situated at a considerable distance from the village, thereby it will not have any impact on the village. Finally, he expressed no objection to the proposed quarry.

3) **Mr.Baskaran, Magaral Village,**

He stated that an excessive amount of water is being spilled onto the road by vehicles transporting M sand and P sand, thereby adversely affecting two-wheeler riders. Additionally, he requested to control the dust generated by quarry vehicles.

4) **Mr.Sundarraj, Magaral Periya Street**

He stated that the contribution of the quarry has made significant progress in Magaral village compared to other villages. Furthermore, he requested that the CER funds allocated by the quarry operating in their village be utilized exclusively for the development of their own village, rather than being allocated to other villages. He also affirmed that the quarry owner has been

adhering properly to the prescribed guidelines and that the quarry has not caused any harm to their village. Finally, he expressed his support for the proposed quarry.

5) **Mr.Parameshwaran, Magaral Village**

He stated that the government school in Magaral village should be improved by upgrading it from a middle school to a high school. Additionally, he requested that welfare schemes be implemented for the government school through CER funds.

Then, the Sub Collector, Kancheepuram, said that if any other members of the public want to express their opinions, they could come forward to register their opinions, views, and suggestions. Since no others from the public came forward to share their views, they invited the District Environmental Engineer to summarize the meeting's proceedings.

Further, the District Environmental Engineer has summarized the entire meeting proceedings and also informed that the said views, suggestions, and responses of the public are recorded through videography, and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamil Nadu.

Furthermore, the District Environmental Engineer informed that the Proceedings of the Public Hearing Meeting will be made to be displayed at the District Collectorate, Kancheepuram, the Walajabad Taluk office, the Magaral Village Panchayat Office; and the Office of the District Environmental Engineer, TNPCB, Sriperumbudur, and also on the TNPCB website of www.tnpcb.gov.in after the said public hearing. Comments, if any, on the proceedings may be sent directly to the regulatory authorities (Member Secretary, State Environmental Impact Assessment Authority—Tamil Nadu / MoEF&CC) and the applicant concerned. Finally, the Sub Collector, Kanchipuram, has thanked everyone who attended the meeting on behalf of the Kanchipuram District Administration.

| | |
|---|---|
| 21/08/25 | 21/8/25 |
| **District Environmental Engineer** | **Sub Collector** |
| **Tamil Nadu Pollution Control Board,** | **Kancheepuram** |
| **Sriperumbudur,** | (3/3) |

21/08/2025

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the Tamil & English Newspapers dated 05.07.2025 for notifying the public hearing meeting.
2. Attendance sheet at the public hearing (Total pages 4 & 69 Persons).
3. Audio & Video stored in the Pen drive of the public hearing proceedings.
4. Photographs of the public hearing proceedings.
5. Soft and Hard copies of EIA Report, Executive Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. No Petitions were received from the public / NGO / Environmentalist through E-mail, Postal and in the public hearing meeting.

**<u>காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், மாகரல் –B கிராமம், புல எண். 700/1(பகுதி)ல் 0.89.50 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/எ்.சிவசுவாமி ரத்தினவேலு சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி அமைய மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தால் அனுமதி வழங்க பரிசீலிக்கப்படுவது தொடர்பாக 19.08.2025 அன்று நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கையின் விவரங்கள்</u>**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர்: | காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், மாகரல் –B கிராமம், புல எண்.700/1(பகுதி)ல் 0.89.50 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள **தி/எ்.சிவசுவாமி ரத்தினவேலு சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி** திட்டம் நிறுவப்படுவது தொடர்பாக. |
| இடம்: | தி/எ்.பாக்யா திருமண மண்டபம், மாகரல் காவல் நிலையம் அருகில், மாகரல் கிராமம், வாலாஜாபாத் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம். |
| நாள் : | 19/08/2025 |

**பங்கேற்றோர்:**

**<u>திருவாளர்கள்</u>**

| | | |
|---|---|---|
| 1. | பி.ஐ.ஆசிக் அலி | சார் ஆட்சியர்,<br>காஞ்சிபுரம். |
| 2. | வி.புருஷோத்தமன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பெரும்புதூர். |
| 3. | வீ.ரங்கசாமி | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பெரும்புதூர். |
| 4. | இரா.செல்வராஜன் | உதவி மேலாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பெரும்புதூர் |
| 5. | இரா.திராவிடச்செல்வம் | தட்டச்சர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பெரும்புதூர் |

| | | |
|---|---|---|
| 6. | சி.ரத்தினவேலு | உத்தேசிக்கப்பட்ட குவாரி உரிமையாளர் |
| 7. | பொதுமக்கள் தன்னார்வலர்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | ( 69 நபர்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர் அவர்கள் சுற்றுச்சூழல் அனுமதிபெறும் பொருட்டு நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் மதிப்பிற்குரிய சார் ஆட்சியர் காஞ்சிபுரம் அவர்களையும், பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் அனைவரையும் வரவேற்று காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், மாகரல் – B கிராமத்தில், **தி/ள்.சிவசுவாமி ரத்தினவேலு சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி** புல எண்.700/1(பகுதி)ல் 0.89.50 ஹெக்டேர் பரப்பளவில் நிறுவப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து கீழ்க்கண்ட விவரங்களையும் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006ன்படி வகை B1 மற்றும் அட்டவணை 1(a) இன் கீழ் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தின் செயல்பாட்டிற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தி தயாரிப்பதற்கான குறிப்பு விதிமுறைகளை Terms of Reference (TOR) 14.05.2024 அன்று வழங்கியுள்ளது.

மேலும், நிறுவனம் வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடைபெற்றது.

இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின் படி, தி/ள்.சிவசுவாமி ரத்தினவேலு சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்திற்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டமானது காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம்,

மாகரல் கிராமம் தி/ள்.பாக்யா திருமண மண்டபத்தில் 19.08.2025 அன்று காலை 10.30 மணியளவில் நடைபெறும் என்று "நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" மற்றும் "தினகரன்" ஆகிய ஆங்கில மற்றும் தமிழ் நாளேடுகளில் முறையே 05.07.2025 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும் அப்பகுதியிலுள்ள மக்களுக்கு இத்தகவல் ஒலிபெருக்கி மூலம் தெரிவிக்கப்பட்டது.

மேலும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், இக்கூட்டத்தில் தி/ள்.சிவசுவாமி ரத்தினவேலு சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விவரங்களை திட்ட ஆலோசகர் (EIA Consultant) அவர்கள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை விரிவாக எடுத்துரைப்பார்கள் என்று தெரிவித்தார். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தங்களது கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்களின் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். தங்களுடைய கருத்துக்கள் முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்கள் இத்திட்டத்தின் விவரம் மற்றும் திட்டத்தின் நிர்வாகத்தினரால் நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை தொடர்பான விவரங்களையும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார் .

திட்ட ஆலோசகர் (EIA Consultant) அவர்கள் சார் ஆட்சியர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும் வரவேற்று நிழற்பட விளக்க காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி தொழிற்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

அதன்பின்னர் சார் ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, வழங்கலாம் என கேட்டுக்கொண்டார். கருத்துகள் பதிவு செய்யும் முன்

பொதுமக்கள் தங்கள் பெயர், தங்கள் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கருத்துக்களை தெரிவிக்கலாம் என்றும் தெரிவித்தார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

1. <u>திரு.அஜித்குமார், மாகரல் கிராமம்</u>

    இவர் கூறுகையில் குவாரி உரிமையாளர்கள் வேலை வாய்ப்பில் தங்களது கிராமத்தினருக்கே முன்னுரிமை வழங்கபடவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

2. <u>திரு.மணிகண்டன், மாகரல் புதிய காலனி</u>

    இவர் கூறுகையில் குவாரியினால் தங்களது கிராமத்தில் பல நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும், மேலும் அமையவிருக்கும் குவாரியானது இக்கிராமத்திலிருந்து தொலைவில் உள்ளதால் கிராமத்திற்கு எந்த ஒரு பாதிப்பும் இல்லை எனவும் கூறினார். இறுதியாக குவாரி அமைவதற்கு எந்த ஒரு ஆட்சேபனையும் இல்லை எனத் தெரிவித்தார்.

3. <u>திரு.பாஸ்கர், மாகரல் கிராமம்</u>

    இவர் கூறுகையில் M sand மற்றும் P sand எடுத்துச்செல்லும் வாகனங்களில் இருந்து அதிகப்படியான தண்ணீர் சாலையில் கொட்டுவதாகவும் இதனால் இருசக்கர வாகனங்களில் செல்வோர் பாதிக்கப்படுவதாக தெரிவித்தார். மேலும் குவாரி வாகனங்களில் இருந்து அதிகப்படியான தூசுகள் பரவுவதால் இதனை கட்டுப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

4. <u>திரு.சுந்தர்ராஜ், மாகரல் கிராமம், பெரிய தெரு</u>

    இவர் கூறுகையில் குவாரியினால் மற்ற கிராமங்களை விட மாகரல் கிராமம் அதிக முன்னேற்றம் அடைந்துள்ளதாகவும், மேலும் தங்களது கிராமத்திற்குட்பட்ட பகுதியில் இயங்கும் குவாரியில் இருந்து வழங்கப்படும் CER நிதியினை தங்களது கிராமத்திற்கே பயன்படுத்த வேண்டும் எனவும், நிதியினை மற்ற கிராமத்திற்கு வழங்கக் கூடாது என கேட்டுக்கொண்டார். மேலும் இக்குவாரி உரிமையாளர் குவாரிக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு

நெறிமுறைகளை முறையாக பின்பற்றுவதாகவும், இக்குவாரியினால் தங்களது கிராமத்திற்கு எந்த ஒரு பாதிப்பும் இல்லை எனக் கூறி இறுதியாக இக்குவாரி அமைவதை வரவேற்பதாக தெரிவித்தார்.

5. **திரு.பரமேஸ்வரன், மாகரல் கிராமம்**

இவர் கூறுகையில் மாகரல் கிராமத்தில் உள்ள அரசு பள்ளியின் தரத்தை நடுநிலைப் பள்ளியில் இருந்து உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டும் எனவும். மேலும், CER நிதியின் மூலம் அரசு பள்ளிக்கு நல திட்டங்களை பெற்றுத்தர வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

சார் ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்கள் வேறு எவரேனும் தங்களது கருத்துக்களை தெரிவிக்க கேட்டுக்கொண்டார். அதனை தொடர்ந்து வேறு எவரும் கருத்துக்களை தெரிவிக்க முன்வரவில்லை என்பதால் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களை கூட்ட நடவடிக்கை பற்றி சுருக்கமாக எடுத்துரைக்க கேட்டுக்கொண்டார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர், திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துகள், ஆலோசனைகளின் சுருக்கத்தை எடுத்துரைத்தார். மேலும், இப்பொதுமக்களின் கருத்துகள், ஆலோசனைகள் ஆகியவை தொகுத்து, ஒலி மற்றும் ஒளி மூலம் பதிவு செய்யப்பட்ட அனைத்தும் அப்படியே, மாநில சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என்றும் தெரிவித்தார்.

மேலும் மேற்குறிப்பிட்ட செய்தித்தாளில் வெளியிடப்பட்ட பொது அறிவிப்பின்படி, இப்பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை குறிப்பின் நகலானது பொது மக்களின் பார்வைக்காக காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வாலாஜாபாத் வட்டாட்சியர் அலுவலகம், மாகரல் கிராம ஊராட்சி அலுவலகம், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர், ஒரகடம் ஆகிய இடங்களில் வைக்கப்படும் எனவும், மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளமான www.tnpcb.gov.inல் வெளியிடப்படும் எனவும். நடவடிக்கை

குறிப்பின் மீதான கருத்துக்கள் ஏதேனும் இருந்தால், உறுப்பினர் செயலர், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் –தமிழ்நாடு / MoEF&CC மற்றும் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரருக்கும் நேரடியாக அனுப்பலாம் என்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. இறுதியாக சார் ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்தார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருப்பெரும்புதூர்.

சார் ஆட்சியர்,
காஞ்சிபுரம்.

**இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 05.07.2025).
2. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (4 பக்கங்கள் 69 நபர்கள்)
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் ஒலி மற்றும் ஒளிப்பட அடங்கிய Pendrive– 2 No's.
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
5. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
6. பொதுமக்கள் தன்னார்வ தொண்டு நிறுவனம் / சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடமிருந்து மின்னஞ்சல், அஞ்சல் மற்றும் பொது மக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் மனுக்கள் ஏதும் பெறப்படவில்லை.